# ஈ.வே. ரா என்னும் பெரியார்!

# அரை நூறாண்டுகளுக்கு மேலாய்,
இம்மண்ணில்;
உச்சரிக்கப் படும் பெயர்!

# மனிதம் தேடிய மா மனிதன் நீ!
கருத்துக்களை எவர் மீதும்,
யார் மீதும் என்றும் நீ திணித்ததில்லை!

# அறிவோடு சிந்திக்க,
அனைவரையும் அழைத்தவன் நீ!
எனக்கு மீசை முளைக்கும் முன்னே,
இம் மண்ணை விட்டுப் போனவன் நீ!

நான், தேடலும் தொடங்கி,
தெளிவை நோக்கி, நகரும் போது,
காலன் உன் கணக்கை முடித்துவிட்டான்!

# ஒரு கடவுள் மறுப்பாளனாகவே,
உன்னைக் காண முடிந்தது!

மக்கள் கூடும் இடங்களில்,
உனக்குச் சிலை,
அவற்றில் உன் கருத்துக்கள்!

“கடவுள், இல்லை, இல்லவே இல்லை,
கற்பித்தவன் முட்டாள்” என,
அன்று எனக்கு ஒன்றும் புரியவில்லை!

# இளைஞனாகும் முன்னே,
என்னுள் எழுந்த கேள்வி,
எதற்காக, இந்த உலகம் இயங்குகிறது?

எந்தையிடம் தொடங்கிய,
எனது தேடல் இன்னும் தொடர்கிறது!

# திருச்செங்கோடு மாநாடுதான்,
உன்னை திசை திருப்பியதை அறிந்தேன்!
அதன்பின் தான்; உனது,

சுயமரியாதை சிந்தை செயல்படத்
தொடங்கியுள்ளது!

உன் கருத்தியல் தாங்கிய ஆசான்கள்,
நண்பர்கள் என,



வாய்ப்பு கிடைத்த போது,
சிந்தையை ஓட விட்டேன்!

# பட்டினத்தடிகளோடு,
இன்னும் பலரது, பாடல்களையும்
வாழ்வியல் தேடலோடு,
படித்த போது,
நீயும் நினைவுக்கு வந்தாய்!

ஏற்ற தாழ்வுகள் வாழ்வின்,
இயன்நிலை என்றதை, ஏற்காதவன் நீ!

# கோயில் நுழைவுதான்,
உனது குறிக்கோள் எனில்,
நாராயண குரு போல் நீ,
நடை பயின்றிருக்கலாமே;
என எண்ணினேன்!

இம்மண்ணுக்கு அது ஏலாத காரியம் எனப்,
பின்னாளில் புரிந்து கொண்டேன்!

# முப்பதுகளின் தொடக்கத்தில்,
மனிதத்தின் முகவரி அறிந்தேன்!
கடவுளை மனிதன் படைத்த,
கருத்தியல் தெளிந்தேன்!

# அறிவோடு சிந்தித்து,
வாழ்க்கையின் ஆழம்
உணர்ந்தவன் தமிழன்!
இயங்கு சக்தியின் இயன்நிலை உணர்ந்து,
தேவைக்கு ஏற்பக் கடவுளைப் படைத்து,
தெளிவுடன் வாழ்ந்தவன்!

# கற்பனைக்கொவ்வாத,
கதைகள் எனவாய், புராணம் படைத்து,
கணவன் மனைவியாய் கடவுளும் ஆக,
ஏற்ற தாழ்வுகள்; பின்னாளில்,
எளிதாய்ச் சமைக்கப் பட்டன!

பக்தி இலக்கியம் பரவிய போதும்,
மானுடம் மட்டும் மீளவே இல்லை!

# இம்மண்ணில்,
நீயும் மகாத்மாவும் மட்டுமே,
தலைவனாக விரும்பாத,
மனிதனாய் வாழ்ந்தீர்கள்!

# நீ மூத்திரச் சட்டியை,
முதுகில் சுமந்தாய் யென,
கேவலப் படுத்துகிறது ஒருகூட்டம்!

அறியாது, அந்தக் கூட்டம்,
எல்லா மகான்களும்,
துன்பியல் தாங்கிதான்,
மரித்திருக்கிறார்கள் என்று!

# உனது போராட்டத்தால்,
முகவரி பெற்றவர்கள்தான்,
உன்னை மூடன் என்கிறார்கள்!
திராவிடம் என்கிறார்கள்!

அதுவே,
உனது சிந்தையின், செயலின் வெற்றி!

தமிழ், திரமிளமாகி; திராவிடமானதை,
அறியாதவர் அவர்!

கன்னடம் உனது மொழியானதால்,
திராவிடம் எனும் கருத்தியல் வந்ததோ?

# கடவுள் என்பது,
உணர்வில் தோன்றும்;
ஓர் உயரிய நம்பிக்கை!

படைத்தவன், அவனோ, அவளோ,
எதுவோ அதுவோ யார்தான் அறிவரோ!

# மதங்களைப் படைத்தது மனிதனே!
மகான்கள் யாவரும்,
இறைவனாய் உணர்ந்ததை,
இயம்பிச் சென்றனர்!
இறைவனின் தூதராய்,
ஒவ்வொருவருக்கும் ஒரு நம்பிக்கை!

# இன்றையச் சாமியார்கள் போல்,
மூளைச் சலவைச் செய்து,
முகவரி கண்டவனல்லவே நீ!
யாவரையும் சிந்திக்கச் சொன்னாய்!

மனிதனை மனிதன் மதிக்காத மான்மியம்;
உனக்குப் பின்னால் தான் வந்தது என்பர்!
உண்மைதான்!
அடிபட்ட நாய் சீறுவதைப் போல்தான் அது!

# உனக்கு முன்னே,
ஒரு சமூகம் இம்மண்ணில்;
சமூக விடுதலைக்கு வித்திட்டதை,
விருஷமாக்கியவன் நீ!

# அந்தக் கடவுளை,
முழுமையாக உணர்ந்தபோது,
ஒன்றைப் புரிந்து கொண்டேன்!

உன்னைப் படைத்து,
தன்னிலை உணர்த்தும் தகைமையால்,
மானுடம் போற்ற,பேதமைக் களைய
பிரியமானான் என்று!

# ஆச்சாரியன் இராமானுஜனுக்கும்,
உனக்கும், செயல்நிலை ஒன்றுதான்!
தேடிய கலன்கள்தான் வேறு வேறு!

# ஒன்றை யொன்று அழித்தே யுண்ணல்,
உலக நியதி என்பது போல்,
அறம் வெல்ல அந்த இறைவன்;
உன்னை அனுப்பி தன்னையும்,
சீண்டிக் கொண்டான் போலும்!

எழுதிய புராணத்தில் உண்டு,
எதிரியாய் இரணியன்,
பிறவி கொண்டான் என்று!

# உன் பெயரால் தவறிழைப்பவர்கள்,
ஒருநாள், தன்னையுணர்ந்து
மாற்றிக் கொள்வர்!
அந்த இறைவன் எழுதிய,
மாறா வாழ்வியல் தத்துவம் அதுவே!
மானுடம் வெல்ல வந்த மாமணியே!
நீ வாழ்க!

- **கவிவளவன்,**
04-05-2022 (01.45 PM)